# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## விசாரணை ஆணைக்குழுக்கள் (திருத்தம்)

***(393 ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரால் 2018, மே மாதம் 09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2018, மாச்சு மாதம் 29 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

***[ 244 ஆம் சட்டமூலம் ]***

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*
*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 18.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சட்டப்பயன்பற்றிய கூற்று

**வாசகம் 2 :** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய் யப்படும்) (393 ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தில் 24அ, 24ஆ, 24இ, 24ஈ மற்றும் 24உ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துவதுடன் உட்புகுத்தப்பட்டவாறான பிரிவுகளின் சட்டப்பயனானது, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு ஒரு விசாரணை ஆணைக்குழுவினாலான புலனாய்வின்போது அல்லது விசாரணையின்போது சேகரிக்கப்பட்ட விடயங்களைக் கவனத்துட்கொள்வதற்கு ஏற்பாடுசெய்வதும், குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுக்கும்படி இலஞ்சம் அல்லது ஊழல் தடுப்புப் பணிப்பாளர் தலைமையதிபதியைப் பணிப்பதுமாகும்.

**வாசகம் 3 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது "இலஞ்சச் சட்டம்", "இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு", "சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் சட்டம்", பணிப்பாளர் தலைமையதிபதி", "சட்ட வலுவுறுத்தல் அதிகாரி", "தண்டனைச் சட்டக்கோவை" மற்றும் "பணம் தூய்தாக்கல் தடைச் சட்டம்" என்னும் சொல்லமைப்புகளுக்கான வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதாகும்.

ச. வ.- ஓ. 1/2018

**(393 ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, விசாரணை ஆணைக்குழுக்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

393 ஆம் அத்தியாயத்தில் 24அ, 24ஆ, 24இ, 24ஈ மற்றும் 24உ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**2.** (393 ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டம், 24 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றதென்பதுடன் அப்புதிய பிரிவுகளானவை, அச்சட்டவாக்கத்தின் 24அ, 24ஆ, 24இ, 24ஈ மற்றும் 24உ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுத்தல்.

24அ. (1) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தில் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவானது, 2 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவொன்றினாலான, விடயத்துக்கேற்ப, ஒரு புலனாய்வின்போது அல்லது விசாரணையின்போது அல்லது ஒரு புலனாய்வின் போதும் விசாரணையின்போதும் சேகரிக்கப்பட்ட விடயங்களைக் கவனத்துட் கொள்வதன்மீது பின்வரும் சட்டங்களின்கீழான தவறொன்று புரியப்பட்டுள்ளதெனத் திருப்திப்படுமிடத்து, பின்வரும் சட்டங்களின் நியதிகளின்படி குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுக்கும்படி இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியை அது பணிக்கலாம்:-

(அ) இலஞ்சச் சட்டம்

(ஆ) சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் சட்டம்;

(இ) பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட சட்டமுறையற்ற செயற்பாடு இலஞ்சச் சட்டத்தின் நியதிகளின்படி இலஞ்சமாக அல்லது ஊழலாக இருக்கும் போது அச்சட்டம்; அல்லது

(ஈ) தண்டனைச் சட்டக்கோவையின் கீழான ஏதேனும் தவறு, இலஞ்சச் சட்டத்தின் அல்லது சொத்துக்களையும் பொறுப்புக் களையும் வெளிப்படுத்தல் சட்டத்தின் நியதிகளின்படியான தவறொன்றுடன் அதே நடவடிக்கையில் புரியப்பட்டுள்ள விடத்து, சட்டத்துறைத் தலைமையதிபதியின் ஒருப்பாட்டுடன், தண்டனைச் சட்டக்கோவை.

(2) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல் களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக் குழுவானது, (1) ஆம் உட்பிரிவின்கீழான வழக்கு நடவடிக்கைகளைத் தொடுக்குமுன்னர் –

(அ) ஏதேனும் தவறு புரியப்பட்டமை பற்றி மேற் கொண்டு புலனாய்வுகளை நடாத்தலாம்;

(ஆ) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட விடயங்கள் பெறப்படுமுன்னர் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு வினால் நடாத்தப்பட்ட புலனாய்வொன்றின் போது சேகரிக்கப்பட்டிருக்கக்கூடிய விடயங் களைக் கவனத்துட்கொள்ளலாம்; அத்துடன்

(இ) வேறேதேனும் சட்ட வலுவுறுத்தல் அதிகாரியிடமிருந்து இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு பெற்றிருக்கக்கூடிய விடயங்களைக் கவனத்துட்கொள்ளலாம்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, சேகரிக்கப்பட்டவையும் பெறப்பட்டவையுமான விடயங்களை இயைபான அதிகாரிக்கு அனுப்பி வைத்தல்.

24ஆ. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தில் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவானது, தோதானதென அது கருதினால், 24அ என்னும் பிரிவின்கீழ் சேகரிக்கப்பட்டவையும் பெறப்பட்டவையுமான விடயங்களை, வேறேதேனும் சட்டத்தின்கீழ் ஏதேனும் தோதான நடவடிக்கையை எடுப்பதற்குச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அல்லது வேறெவரேனும் அதிகாரிக்கு அனுப்பி வைக்கலாம்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல் களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, அளிக்கப்பட்ட கூற்றுக்களை அல்லது சான்றைப் பதிதலாகாது.

24இ. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவானது, 2 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவொன்றுக்குக் கூற்றொன்றை அளித்துள்ள அல்லது அத்தகைய ஆணைக்குழுவின் முன்னர் சான்று அளித்துள்ள ஆளொருவரின் கூற்றொன்றை, தோதானதென அது கருதினாலொழிய, பதிவதற்குத் தேவைப்படுத்தப் படுதலாகாது.

*இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல் களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, சட்டத்துறைத் தலைமையதிபதி யின் மதியுரையை அல்லது அபிப் பிராயத்தை நாடுதல்.*

24ஈ. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவானது, 24அ, 24ஆ அல்லது 24இ என்னும் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்குப் பயன் கொடுப்பதில் சட்டத்துறைத் தலைமையதிபதியின் அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதியைப் பிரதிநிதித்துவம் வகிக்கின்ற எவரேனும் அலுவலரின் மதியுரையை அல்லது அபிப்பிராயத்தைப் பரிந்து கேட்கலாம், பெறலாம் மற்றும் கவனத்துட் கொள்ளலாம்.

*இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல் களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக் குழுவின் தத்துவங்களும் பணிகளும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் மூலம் மட்டுப்படுத்தப் படுதலாகாது.*

24உ. இச்சட்டத்தின் ஏற்பாடுகள், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தினால் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களையும் பணிகளையும் மட்டுப்படுத்துதலாகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 27 ஆம் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*பொருள் கோடல்.*

27. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலொழிய -

"இலஞ்சச் சட்டம்" என்பது, (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டம் என்று பொருளாகும்;

"இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டம்" என்பது, 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டம் என்று பொருளாகும்;

"இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு" என்பது, இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட ஆணைக்குழு என்று பொருளாகும் ;

''சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் சட்டம்'' என்பது, 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் சட்டம் என்று பொருளாகும்;

''பணிப்பாளர் தலைமையதிபதி'' என்பது, இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்புப் பணிப்பாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்;

"சட்ட வலுவுறுத்தல் அதிகாரி" என்பது, ஒரு பொலிசு அலுவலர் அல்லது ஒரு தவறு புரியப்பட்டமைபற்றிப் புலனாய்வு செய்வதற்கு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனுமாள் அல்லது அதிகாரி என்று பொருளாகும்;

"தண்டனைச் சட்டக்கோவை" என்பது, (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக் கோவை என்று பொருளாகும்; அத்துடன்

"பணம் தூய்தாக்கல் தடைச் சட்டம்" என்பது, 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டம் என்று பொருளாகும்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.